1997 ஏப்ரல் 24]
645—

கல்குளம் வட்டத்தைப் பிரித்தல்

***6745 - டாக்டர் வே. ஆல்பன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்குளம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து குலசேகரத்தை தலைமையிடமாகக் கொண்டு வட்ட அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்குளம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து குலசேகரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வே. ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்குளம் வட்டம், சுமார் 7 இலட்சம் மக்கள் தொகையையும், 3 சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியையும் கொண்டது. மேலும், கடல் முதல் மலை வரையிலும் பரந்து கிடக்கின்ற ஒரு வட்டமாகும். எனவே, மக்கள் நலனைக் கருதியும், நிர்வாக வசதியைக் கருதியும், புதிய வட்டங்களை உருவாக்கும்போது, குலசேகரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, திருவட்டாறு வட்டம் என உருவாக்க அரசு பரிசீலனை செய்யுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஆல்பன்

அவர்களின் உணர்வை மதித்து, மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் ஆகியோரின் அறிக்கையினைப் பெற்று, சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 646, திரு. கே. வேணு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

646—

கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தைப் பிரித்தல்

***2759-திரு. கே. வேணு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி ஒன்றியம் 61 ஊராட்சி, 1 பேரூராட்சியாக உள்ளதை மாதர்பாக்கம் - பாதிரிவேடு என்று இரண்டாகப் பிரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தை, மாதர்பாக்கம், பாதிரிவேடு என்று இரண்டாகப் பிரிப்பது சம்பந்தப்பட்ட செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. வேணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், 61 ஊராட்சிகளைக் கொண்ட மிகப் பெரிய ஒன்றியம். ஏறக்குறைய, மக்கள் தொகை 3 இலட்சத்தைத் தாண்டுகிற அளவுக்குள்ள மிகப் பெரிய ஒன்றியம். கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தை, மாதர்பாக்கம், பாதிரிவேடு என்று இரண்டாகப் பிரிப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையளித்தார்கள். நான் கேட்டது அதுவல்ல, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், மாதர்பாக்கம்-பாதிரிவேடு ஊராட்சி ஒன்றியம் என இரண்டாகப் பிரிக்க அரசு முன்வருமா என்பதாகும். எனவே, அவ்வாறு பிரிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.